ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-2, இதழ்-1, சனவரி 2019

# பூதப்பாண்டிக் கல்வெட்டில் இடப் பெயர்வுச் செய்தியும் காது அறுத்த பிழையும்

**சு. சிவா**

**உதவிப்பேராசிரியர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி,**
**பணக்குடி – 629 301, தமிழ்நாடு, இந்தியா.**

---

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டியில் கி.பி. 1691இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று காணப்படுகின்றது. (கன்னியாகுமரி கல்வெட்டுக்கள் தொகுதி எண் 5/1969/80). பூதப்பாண்டி வடக்குத்தெரு மூலையில் தனிக்கல்லாக உள்ளது. வேணாடு அரசாட்சியின் காலத்தைச் சார்ந்த இக்கல்வெட்டு, திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதியிலும் பதிவாகியுள்ளது (TAS vol. V11 பகுதி 2 பக்கம் 93).

மங்கலம் முதல் மணக்குடி வரை தோவாளைக்கு மேற்கு பன்றிவாய்க்காலுக்குக் கிழக்கு என்பது நாஞ்சில் நாட்டு எல்கைகளாகும். கன்னியாகுமரிக் கல்வெட்டுக்கள் தொகுதி எண் 5/1969/82}. பூதப்பாண்டியில் உள்ள பூதலிங்கேசுவரர் கோவில் சீபண்டாரத்தில் [கோவில் சொத்துக்களை நிர்வகிக்கும் அமைப்பு} இருந்து கொண்டு கோவில் நிர்வாகிகள் அவ்வூரிலுள்ள சாலிய நகரத்தாருக்குச் சில சலுகைகள் அளித்து, அதை நடைமுறைப்படுத்தும் விதமாகக் கல்வெட்டிலும் செம்பிலும் {செப்பேடு} ஆணை வெளியிட்டுள்ளனர். கல்வெட்டிலுள்ள குறியீடுகளையும் கிரந்தச் சொற்களையும் மாற்றிக் கல்வெட்டு கீழ்வருமாறு தரப்படுகிறது.

**கல்வெட்டு**

1. கொல்லம் 867
2. ஆண்டு தை மாதம் 19
3. தேதி நாஞ்சி நாட்டு
4. பூதப்பாண்டி
5. யில் நயினார் பூதப்
6. பாண்டீசுரமுடைய நயி
7. னார் சீபண்டாரத்தில்
8. நின்றும் மேற்படியூரிலிரு
9. க்கும் சாலிய நகரத்தா
10. ருக்கு கல்வெட்டி
11. வித்துக் குடுத்த பரிசா
12. விது சாலியர் பே
13. ரில் பல தடி நிலம்
14. தரங்கொண்டு இவ
15. ர்கள் வடசெரியில்
16. குடியளாக இருக்கவு
17. ம் நாரசத்து மேற்கில்
18. குடி அழிஞ்ஞு செரி
19. யிலிருத்தி குடியிருக்க
20. கற்பித்த மொழியாவது
21. சாலியத் தெருவில்
22. ஒருவர் பிளச்சிதெ
23. உண்டானால் சாலி
24. யக் குடியில் நெல்
25. லுல் வித்தும் பா
26. த்திர பண்டமும் மா
27. டு கன்றும் நூலும்
28. பாவும் பணையமெடுக்
29. கிறதுயில்லை பிளை
30. த்தவனை மறிச்சுக்
31. கூட்டி வந்
32. து காதறு
33. த்த பிளைக்
34. குட்படவும் ம
35. ...களும் அ
36. துக்குச்சரிப்
37. பட்ட உத்திரப்
38. பாடும் கொ
39. ண்டு சுகத்தி
40. லெ குடியிருக்க
41. வும் கற்பித்து
42. இராசர
43. தார் ஆள்ப்ப
44. ணைய மெடுத்தா
45. ல் வயிராவி
46. மார் ஆறு பெ
47. ரிலே ஒருவர்
48. கண்ட பெர்
49. கள் பணையம்
50. பறித்துக் கொ
51. ள்ளவும் கற்
52. பித்து வயிரா
53. விமார் கா
54. ணாமல்ப் போ
55. னால் தெற்கு
56. வாசலில்
57. பூசைக்கு
58. அனியாயப்
59. பட்டு பூசை
60. முடக்கம்
61. பணையம் வாங்
62. கிக் கொள்ள
63. வும் கற்பித்து
64. கல்லிலுல் செ
65. ம்பிலும் வெட்டி
66. ஆசெந்திர
67. தாரவே சந்த
68. திப்பிறவெச
69. மெ நடத்த கற்
70. பித்து கல்வெ
71. ட்டி ஆதிச
72. ண்டடெசுர

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

73. ஆக்கினை 74. சுபமஸ்து

**இடப் பெயர்வுச்செய்தி**

வேணாடு அரசாட்சிக் காலத்தில், பூதப்பாண்டியில் இருந்த கோவில் நிர்வாகிகள் சாலியர் {நெசவாளர்-Weavers} சமூக மக்களுக்கு வடசேரிப் பகுதியில் (இன்றைய நாகர்கோவில் ஊரின் ஒரு பகுதி) நிலங்கள் கொடுத்து, அங்குக் குடியேறச் செய்தனர். இதனைக் கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது. சாதிய மோதல்கள், நிலப்பிரச்சனைகள், வாழ்வாதாரப் பாதிப்புகள் உள்ளிட்ட காரணங்களுக்காக மக்கள் இடம் பெயர்வு நீண்ட காலமாக நடந்தேறுவதைக் காணமுடிகின்றது. இக்கல்வெட்டு ஓர் இடம் பெயர்வுச் செய்தியையும் பதிவு செய்துள்ளது.

சாலியர் சமூக மக்கள் பாண்டிய நாட்டில் (ஸ்ரீவில்லிப்புத்தூர், திருநெல்வேலி, வள்ளியூர் உள்ளிட்ட இடங்கள்..) இருந்து இடம்பெயர்ந்து பூதப்பாண்டிப் பகுதியில் குடியேறியதாகத் தெரிகிறது. அங்குச் சாதிய மோதல்கள் ஏற்படவே பூதப்பாண்டி ஊரார் வடசேரிப் பகுதிக்கு அவர்களை இடம்பெறச் செய்தனர். நாகர்கோவில் - வடசேரியில் குடியேறிய போதிலும் பூதப்பாண்டி ஊர்த் தொடர்பு விடுபடவில்லை. அவ்வூர் ஆளுமையே தொடர்கிறது. பூதப்பாண்டி பூதலிங்கேசுவரின் மற்றொரு பெயர் 'சாலியர் தாம் கண்ட திருமேனியன்' என்பது குறிப்பிடத்தகுந்தது. இவர்கள் முதலில் வள்ளியூரிலிருந்து பூதப்பாண்டிக்கு இடம்பெயர்ந்து பின்பு வடசேரிக்கு மாறினார்கள். வடசேரியில் ஒரு கோவிலின் பெயர் 'வள்ளியூர் கருத்த விநாயகர்' என்பதாகும். எங்குக் குடியேறினாலும் ஆதி மண்ணை மறப்பதில்லை என்பதையே இது காட்டுகிறது. இன்று பூதப்பாண்டியில் சாலியர் சமூகமக்கள் யாரும் இல்லை.

**காது அறுத்த பிழை**

இக்கல்வெட்டு பூதப்பாண்டி ஊர்க் கோவில் நிர்வகிக்கும் சபைக்கும் சாலியர் சமூக மக்களுக்கும் இடையே ஆனதாகும். சாலியர் தெருவில் யாராவது ஒருவர் தவறு செய்தால், அந்தத் தவறு மற்றவரின் காது அறுத்த குற்றத்திற்கு நிகராகக் கருதித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. தவறு செய்ய அஞ்சும் நிலையை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

இந்தக் கல்வெட்டின் காலமும் மதுரை நாயக்கர்கள் ஆட்சி செய்த போது {1529-1736} நாஞ்சில் நாட்டில் படையெடுப்பு நிகழ்ந்த காலமும் ஒன்றாகும். நாஞ்சில் நாட்டில் தொடர்ந்து படையெடுப்புகள் நடந்தேறியுள்ளது (அ.கா.பெருமாள், முதலியார் ஆவணங்கள், பக்கம் 40). பெண்களின் தாலிகளைப் பறிப்பதும் காதுகளை அறுத்து அணிகலன்களைக் கவர்வதும் ஆடுமாடுகளைக் கவர்வதும் உள்ளிட்ட கொடூரங்களை நாயக்கர்கள் ஆட்சியில் செய்துள்ளனர் (அ.கா.பெருமாள், குமரி மாவட்ட வரலாறு, பக்கம் 68). இதன் தாக்கம் கல்வெட்டிலும் பதிவாகியுள்ளதாகக் கருதலாம். தவறு செய்பவர்களின் குற்றம் காது அறுக்கும் போர்க் குற்றத்துக்குச் சமமாகக் கருதப்பட்டது. நாயக்கர்கள் ஆட்சியில் மட்டுமே இவ்வாறான கொடூரங்கள் நடைபெற்றதாகக் கருதமுடியாது. அரசாட்சிக் காலத்தில் பிற சமூகத்தவரின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் செயல் காலம் காலமாக மிகக் கொடூரமாக நடந்தேறியுள்ளன.

தவறு செய்பவர்களின் வாழ்வாதாரப் பொருட்களான நெல் விதைகள் (Paddy seeds), பாத்திரங்கள் (Vessels), கொண்டு செல்லத்தக்க உடைமைப் பொருட்கள்(Chattel), ஆடுமாடுகள்(Cattle), நூல் (yarn) உள்ளிட்ட பொருட்களைக் கைப்பற்றக் கூடாது எனக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அதற்குச் சமமான பணையப் பொருட்களைக் கொடுத்து மீண்டும் நல்வாழ்வு வாழலாம் எனச்சபை வாழ்வளித்துள்ளது.

தவறு செய்தவர்களின் பணையப் பொருட்களை வயிராவிமார் (கோவில் நிர்வாகக் காவலர்கள்) பெற்றுக் கொள்வர். இதற்காக வயிராவிமார் ஆறு பேரில் ஒருவர் நியமிக்கப்படுவர். வயிராவிமார் பணையம் வாங்கும் சூழ்நிலை இல்லாமல் போனால், தவறு செய்த சாலியருக்குப் பூதலிங்கேசுவரர் தெற்கு வாசலில் நடைபெறும் பூசை செய்யும் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. பூசை முடக்கம் தவிர்க்கப் பணையப் பொருட்களைக் கோவில் நிர்வாகம் பெற்றுள்ளது. இச்செய்திகள் ஊர்ச்சபைக்குச் சாலியர் சமூகமக்களின் மீதிருந்த மேலாண்மையைக் காட்டுகிறது.

## DETAILS OF MIGRATION AND THE INCISION OF EAR IN BOOTHAPANDI EPIGRAPH

**S. Siva**

Details regarding the migration of weavers community people are found in the epigraph of Boothapandi in Kanyakumari district. Due to caste riots, weaver community people migrated to Vadacheri. The epigraph also holds the details of the notorious punishments given

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

to the weaver community people. Hence it prohibits the person from committing sins in the future.